பிரகாஷ் புரொடக்ஷன்ஸ்
அண்ணி
தமிழ்
நேஷனல் பிக்சர்ஸ் ரிலீஸ்
G.H.RAO

# " அண்ணி "

நடிகர்கள்

| | | |
|---|---|---|
| **ஜி. வரலக்ஷ்மி** | — | **யசோதா** |
| அண்ணபூர்ணா | — | மீனா |
| சேஷாம்பாள் | — | பார்வதி |
| கமலா | — | கங்கு |
| ஸரோஜா | — | பாலா |
| மாஸ்டர் **சேது** | — | **கோபி** |
| ,, சுதாகர் | — | ரமணா |
| கே. சிவராம் | — | பாலையா |
| சுந்திர ராவ் | — | ஜமீந்தார் |
| கடக் | — | கணபதி |
| ஜி. வி. சர்மா | — | தோட்டக்காரன் |
| ராமசாமி அய்யர் | — | நாட்டாண்மைக்காரர் |
| என். எஸ். சுப்பய்யா<br>கணபதிபட் | — | சிப்பாய்கள் |
| கோபால அய்யங்கார் | — | தலைமை உபாத்தியாயர் |
| சதாசிவ ராவ் | — | தேசியத்தலைவர் |
| ரங்கசாமி அய்யங்கார் | — | டாக்டர் |

---

| | |
|---|---|
| வசனம்-பாடல்கள் : | **எம். எஸ். சுப்ரமணியம்** |
| சங்கீதம் : | **பெண்டியார்லா நாகேஸ்வர ராவ்** |
| நடனம் : | கடக் |
| ஸ்டுடியோ : | ஸ்டார் கம்பைன்ஸ் லிமிடெட் |
| டைரக்ஷன் : | **ப்ரகாஷ் ரூவ்** |
| தயாரிப்பு : | **ப்ரகாஷ் புரொடக்ஷன்ஸ்** |

# " அண்ணி "

## கதைச்சுருக்கம்

—○—

"காக்கை கருப்பு; காகிதம் வெளுப்பு என்பதுதான் நாங்கள் சொல்லிக்கொடுக்கக்கூடியதெல்லாம். பிள்ளைகளின் பிற்கால வாழ்க்கையை, தாய்மார்கள் வளர்க்கும் விதத்தில் இருக்கிறது. லோக மகான்களெல்லாம் தாயால் தாலாட்டப்பட்டவர்கள்தான்" என்று கூறியபடி தலைமை உபாத்தியாயர் ஸர்தார் கோபாலன் கதையை பிள்ளைகளுக்கு எடுத்துச்சொல்லுகிறார்.

பாலையாவும், யசோதாவும் கிராமத்தில் வசிக்கும் தம்பதிகள். பாலையாவின் சிற்றன்னை இறக்கும் தருவாயில் தன் மகன் கோபியை யசோதாவின் கையில் ஒப்புவித்து "அன்னையும், அண்ணியும் அவனுக்கு நீதான்" என்று கூறிச்சாகிருள். பயப்படவேண்டாம் கோபியை வளர்த்து ஆளாக்குவது என் பொறுப்பு என்று வாக்களிக்கிருள் யசோதா. கோபி அண்ணியால் பாலூட்டி, தாலாட்டி வளர்க்கப்பட்டு பெரியவனுகிருன்.

கோபி 14 வயதடைந்தான். வயதைப்போலவே அவனைப்பற்றிய பேச்சும் வளர்ந்தது. கோபி என்ருலே எல்லோர்க்கும் பயம்தான். பூவும் காயுமாக இருந்த ராமையன், தோட்டத்தை யாழாக்கினுன் என்றும், நாட்டாண்மை வெங்கய்யாவின் தலையில் பந்தால் அடித்தான் என்றும், குழப்பம் உண்டாக்கி பள்ளிக்கூடத்தையே மூடி விட்டான் என்றும், அதை பாழ்படுத்தினுன், இதை நாசபடுத்தினுன் என்றும் அவன்மேல் அநேக புகார்கள் வந்தன. ஆனல் கோபி எது செய்தாலும் அதில் ஞாயம் இருக்கிறதென்பது யசோதையின் நம்பிக்கை. அநியா

யத்தை காண சகியாது. அதனால் ஏற்படும் அவன் ஆவேசத்தை நல்லமார்க்கத்தில் திருப்பினால் கோபி பயன் படுவான் என்பது யசோதையின் ஆவல்.

ஊரிலுள்ள ஒவ்வொருவரும் கோபியை பற்றி புகார் செய்வதைக்கேட்டு வெகுண்ட பாலையா, யசோதைமேல் சீறிவிழுகிறான். யசோதாவும் "பொல்லாதவர்களை தண்டிப் பதற்காக பொல்லாத காரியம் செய்தால் எல்லோருமே ஒன்றாக ஆகிவிடுவோம்" என்று கோபிக்கு புத்திமதி சொல்லுகிறாள். யசோதம்மாளுக்கு, சீதா ராம லக்ஷ்மணர் குலதெய்வம்; கொல்லை பலா மரத்தில் உள்ள இரட்டை பலாக்காய்கள் கோபிக்கு ராமர் லக்ஷ்மணர்.

சிறுவயதிலிருந்தே யசோதை அவனுக்கு போதித்து வந்த நல்லமார்க்கத்தின் பயனாக தெய்வ பக்தியும் அவனுக் கிருந்தது. அவன் சொல்படி கேட்டு நடக்கும் பிள்ளைகள் அடங்கிய ராமபட்டாளம் ஒன்று இருந்தது. அவர்கள் எல்லோருக்குமே அந்த ராமர் லக்ஷ்மணர்களிடத்தில் அபார நம்பிக்கை.

யசோதையின் தாயாகிய துர்கம்மாள் ஒரு காலகண்டி வீட்டுக்கு வந்ததும் வராததுமாக கோபியுடன் சண்டை போட்டுக்கொள்ளுகிறாள். சொந்த மகனாகிய ரமணுவின் மேல் பிரியமாக இல்லாது, கோபியின்மேல் அதிக அபி மானமாக இருப்பதைப்பற்றி யசோதாமேல் குறைகூறு கிறாள். எப்பொழுதும் கோபியை சீண்டி, கோபமூட்டி அவனுடன் சண்டை போட்டுக்கொள்ளுகிறாள். கோபி தொல்லைகளும், துஷ்டத்தனமும் பாலையாவால் சகிக்க முடியவில்லை. கோபியால் பாலையாவுக்கும், யசோதாவுக்கும் மனத்தாங்கல் ஏற்படுகிறது.

ஒரு நாள் அந்த ஊர் ஜமீந்தாரின் பிள்ளை ஒரு மெலிந்த சிறுபையன்மேல் ஏறி குதிரை சவாரி செய்தான் கோபியால் இதைப்பார்த்து சகிக்கமுடியவில்லை. ஜமீந்தார் பிள்ளையை அடிக்கவேண்டியதாயிற்று. ஜமீந்தாருக்கு கோபம் உண்டாயிற்று. பாலையாவை தன் நிலத்திலின்றும்

நீக்கினான். வேதனையால் பாலையா யசோதாவை அடித்தான். அண்ணி அடிப்பட்டதை காண, கோபியால் சகிக்க முடியவில்லை. இனிமேல் நான் ஒன்றும் செய்யமாட்டேன் அண்ணீ, என் ராம லக்ஷ்மணர்கள்மேல் ஆணை என்று அண்ணிக்கு வாக்களிக்கிறான் கோபி. ராம பட்டாளம் ஊர் வம்புக்கு கூப்பிட்டும் வரமறுக்கிறான். பிள்ளைகள் கேலி செய்கிறார்கள். யார் எந்தவிதத்திலும் அவனை சீண்டினாலும் அண்ணிக்கு கொடுத்த வாக்குக்காக எல்லாவற்றையும் சகித்துக்கொள்ளுகிறான்.

இந்த மாறுதலைக்கண்டு துர்க்கம்மாவால் சகிக்கமுடியவில்லை. அவள் த்ருஷ்டி ராம லக்ஷ்மணர்களாகிய பலாக்காய்கள்மீது விழுந்தது. வேலையாள் முனியனை அவைகளை வெட்டிவரச்சொல்கிறாள். கோபி அவனை தடுத்து எச்சரிக்கிறான். ஆனால் துர்கம்மா தன் சாகஸத்தால் காரியத்தை சாதித்துக்கொள்ளுகிறாள். ராம லக்ஷ்மணர்களை வெட்டிவிட்டார்கள். பாவம் உண்மையை அறிந்தபின் யசோதா கதருகிறாள். என் ராம லக்ஷ்மணர்களை யார் வெட்டினார்கள் அண்ணீ? என்று அலறுகிறான் கோபி. "நான்தான் கோபி" என்று குற்றத்தை தானே ஒப்புக்கொண்டாள் யசோதா. வெகுண்டான் கோபி. கோபாவேசத்துடன் "உனக்கு நான் கொடுத்த வாக்கும் போய்விட்டது" என்று மகா உக்ரோஷத்துடன் வெளியில் போய்விடுகிறான்.

ஆவேசத்தில் நன்மை தீமை என்னும் பேத மறந்து ராம பட்டாளத்துடன் கிராமத்தில் பாய்ந்து கைக்கு வந்ததை எல்லாம் த்வம்சம் செய்கிறான் கோபி. பாலனின் மனம் பேதமடையாதிருக்க கடவுளைப் பிரார்த்திக்கிறாள் யசோதா. களைத்துப்போன கோபி வீட்டிற்கு வருகிறான் துர்கம்மாளுக்கு புத்தி கற்பிக்க எண்ணி, அவள் மீது ஒரு சிறிய கல்லை எறிய அது தவறி அண்ணியின்மேல் படுகிறது. ரத்தம் பீறிட்டு வருகிறது. கோபி நடுநடுங்குகிறான். நிற்காமல் ஓடிவிடுகிறான். பாலையாவின் பொறுமை எல்லை மீறுகிறது. பாகம் பிரிக்கப்படுகிறது. ஒரு வீடு இரண்டாகிறது. அவனுடன் பேசினாலும் சோறு போட்

டாலும் என்னைக்கொன்ற பாவம் உனக்கு என்று ஆணை இடுகிறான் பாலையா.

ஒருநாள், இரண்டுநாள் அண்ணி பேசமாட்டாளா? மன்னித்து சேர்த்துக்கொள்ளமாட்டாளா? என்ற ஆவலால் தட்டிச்சுவரின் இடுக்கின் வழியாக பார்க்கிறான். ஆனால் பயனில்லை அந்த வீட்டில். அந்த ஊரில் இருந்தாலே, அவன் ஹ்ருதயமே வெடித்துவிடும்போல் உணர்ச்சி ஏற்படுகிறது. சீ! பாழாப்போன கிராமம் என்று வெறுத்து பட்டணம் போகிறான் கோபி. பட்டணம் நன்றாக இருக்குமென்று அகமகிழ்ந்தான் கோபி. ஆனால் அங்கே கிராமத்தில் நடப்பவைகளைவிட கோரமானவைகளை கண்டான். எல்லாம் மோசம், சுரண்டல், அநியாயம் எனக்கண்டான். ஆசை நிராசை ஆகிவிட்டது. "மாந்தர் என்பார் இவர்தானா? மாநிலம் என்பது இதுதானா?" என்ற பெரும் கேள்வி மனதில் எழும்பியது. பார்க்குக்கு போய் காந்தி மகான் சிலையடியில் உட்கார்ந்து, மகான்களும், மகாத்தியாகிகளும் சொன்னவாறு அதை செய்பவர் எவரோ என்று மனமுடைந்துவிட்டான். நலம்பெற வழியேதும் இல்லையே!...வருந்துவதில் பயனும் இல்லையே! என்று அதைவிட்டு எழுந்து மகாத்மாவின் உருவத்தை பரிதாபமுடன் பார்த்தான்......

உருவத்தின் உபதேசங்கள் உள்ளத்தில் உதித்ததா?
அண்ணியின் உண்மை வார்த்தைகளை உணர்ந்தானா?
அண்ணியை கண்டறிந்தானா? எப்படி?
அதனால் ஏற்பட்ட சம்பவம் என்ன? எதனால்?
மகான்களின் சரித்திரங்களை அறிந்தானா?
அதனால் அவனுக்கு பலன்?

இதற்கு விடை? வெண்திரை விளக்கும்

# " அண்ணி "

## பாட்டுகள்

—○—

### 1. கோரஸ்

*பொன் விளைந்தது ஜேய் என்போம்*
*புண்ய பூமி இதே எல்லாம் ஸ்ரீ தேவி அருளே*

*காணி நில மதில் ஏரும் உழுது*
*பாடுபட்டே பலனும் கண்டோம்*
*செந்நெல் கதிர்கள் பொன் போல குவிய*
*பொங்கும் இன்பமிதே எல்லாம் ஸ்ரீ தேவி அருளே*

*ஏழை எளியவர் இன்புடன் வாழ*
*உணவும் உடையும் என்னாளும் அருளும்*
*உழவர் பணியது உலகினில் மேலெனும்*
*உண்மையறிந்தோமே எல்லாம் ஸ்ரீ தேவி அருளே*

*பாலும் பொருளும் பொங்கிப் பெருகும்*
*பாக்யம் நிறையும் பரத பூமியில்*
*பஞ்ச பயமினி தீருமே சாந்திபெருவோம் எல்லோருமே*
*எல்லாம் ஸ்ரீ தேவி அருளே*

### 2. யசோதா

*கண்ணே பாப்பா கனியே பாப்பா*
*எந்தன் கண்ணே சின்னப் பாப்பா*
*அன்னை பாரதி உனது மாதா உந்தன் பாக்யமிதே*
*கண்ணே உந்தன் பாக்யமிதே*

*தேசாபிமானி நீ தீரா இத்தேச ரக்ஷக ஒய்யாரா*
*உன்பேரும் ஊரும் திகழ்ந்திடவே*
*உன் கியாதி பூமீதில் பொலிந்திடவே* (தே)

பாரிலே சேவை நீ செய்திட வாடா
மனதில் உருதிகொண்டு பொங்கும் வீரமோடு
பாரதாம்பாள் தெய்வமென்று மனதில் நினையடா
சத்யமும் அஹிம்சையும் உன் மதமென்றெண்ணடா

## 3. யசோதா

ராமஹரே ஜய ராமஹரே
ஸ்ரீராம சீதா ராம ஸ்ரீருங்கார ராமா தேவாதி தேவா (ராம)

பக்த லோகபாலா ராமா பாபநாசசீலா
தேவாதி தேவா (ராம)

சூழும் மாய மோசாவேச பந்தம் தீரும் தேவா
தேவாதி தேவா (ராம)

ப்ரேமரூப ஜீவாதாரா வர்ம மேனே தேவா
தேவாதி தேவா (ராம)

## 4. பையன்களும், சிப்பாய்களும்.

பை:—இதோபார்—கைவரிசை செல்லாதுங்க
எங்க—கோபம் பொல்லாதுங்க
ல லால லல்ல லல்லா

சிப்:—அச்சா காவ்

பை;—சோட்டா மோட்டா சிப்பாய்களா—சிப்பாய்களா
சோதரர்போலே வாழ்வோமே
ஊரினிலே எல்லோரிடமே
உஷாராய் இருந்தா பரவாவை

சிப்:—அச்சா அச்சா
ஓ ஹமே குஷிசே ப்யார் ஹோகயா
ஆட்டத்திலே பாட்டினிலே ஹாயினிருப்போம்
சின்ன பெண்ணைக்கண்டு கேலிசெய்து தமாஷ் செய்வோம்

பை: மிலிடரிவாலோ பெண்களின் ஜோலிக்கி
போனால் முதுகிலே கபீ குபீ

சிப்:—இந்தப்பயங்களெல்லாம் காலி எனிவங்க ஜோலி
வாடா தம்பி போகலாம்
சலாமையா—பாபூ சலாம்

## 5. பிச்சைக்காரன்

ஐயா ஏழை யாருமில்லாத
மாபாவியானேன் (ஐயா)
அந்தோ அனாதை மீதினில் மனமிரங்காதா (ஐயா)
இன்பபோக வாழ்வில் இனிதே வாழ்வார்
இந்தாடா என்றேதாகிலும் தர்மம் செய்திடார் (ஐயா)
உண்ண உணவும் இல்லே கட்டக்கந்தை இல்லே
என்றுமே கொடும்துயர் தானே
புவி வாழ்வே இதானே (ஐயா)

## 6. கங்கு & சிங்காரம்

கங்கு:—என்ன ஆம்பிளெ நீங்க என்ன ஆம்பிளெ
பெண்ணெக்கண்ட உடனே நீங்க தொடர்ந்து கூடவே
போவீங்க (என்)

சிங்கா:—அன்ன நடையிலே ஒய்யார மினுக்கிலே
பட்டுசேலே பளபளன்னு டாலடிக்குது பார்க்க மனதும்
தள்ளாடுதே லவ்வு உண்டாகுதே
என்ன பொம்பிளெ நீங்க என்ன பொம்பளெ

கங்கு:—கவலே இன்றியே கியாலும் பாடியே
பெண்ணேக்கண்டதும் கண்ணடிப்பதும்
கனவில் உருகி மெய் மறந்திடும் வியாதிக்கு ஒரு மருந்தும்
இல்லே (என்ன)

சிங்கா:—ஓ கல்கண்டே என் அல்வாத்துண்டே
தெரியும் உன் கைவரிசை
உல்டா சீதா பல்டி ஏனோ இதோ பார் நீ உன் ஹார்ட்
தடக் தடக் என்கிறதே ஓவர் லௌவ்லே இது பொங்கிடுதே

கங்கு:—ஓ ஆசை மச்சான் ஓ அழகு மச்சான்
ஓ நேச மச்சான் அருகினில் வாவா
நல்ல மருந்து தாரேன் (மிக)
நலமதும் இனி நாம் பெருவோமே
நாம் இனிதாய் இனிவாழ்வோமே

## 7. யசோதா

பொங்கலோ பொங்கல் பொங்கி வருதம்மா
எங்குமினி வைபோக பாக்யம்தான் அம்மா
சீரோடு செல்வக்குழந்தைகள் பெற்றே
பேரோடு புகழோடு வாழ்வாய் நீ அம்மா
பண்டிகைப் பருவமின் நாளதனில் தர்மம்
தந்திட்ட புண்யம் வீணாகாது அம்மா

வரமருள் தாயே கௌரியம்மா
வந்தனைகள் செய்வோமே கௌரியம்மா
உன்பாதம் பணிந்தோம் கௌரியம்மா—எம்மை
கண் பார்த்தருள்தாயே கௌரியம்மா—இனி
பரிவுடன் ஆண்டருள் கௌரியம்மா—கொடும்
பஞ்சமதும் தீர்த்தருள் கௌரியம்மா

அன்புகனிந்தாள் பூதேவி—திரு அருளது தந்தாள் ஸ்ரீதேவி
பொங்கலுமிட்டு பூஜைகள் செய்து வாழ்ந்திடுவோம்
ஜகமீதினில் நாமே (அன்பு)

பகலிரவு மழை வெய்யில் பாராது நீயும்
வயல்தனிலே பயிர் செய்தே பாடும் பட்டாயே
அலுக்காமல் உழைத்தாய் நீ உலகோர் நலம்பெறவே
புரிந்தாய் நீ உயர் சேவை புவிமீதிலே (அன்பு)

கல கல வென்றே கைவளை ஓசை கேட்டதுமே ஓர்
ஆர்வமுண்டாகுது பெண்ணே—நான்
பாடு பட்டாலும் உன் கனிந்த கண்பார்வையால் ஓர்
ஜீவித சுகமே இன்பமாகுதே (அன்பு)

## 8. வேலு & பாலா

சிப்:—என்னம்மா என்னம்மா
கண்ணே நமக்கு கல்யாணம்
நீயே எந்தன் கண்ணுட்டி—இந்த
மோட்டா நான் உன் புருஷன்தான்—என்னை
வேண்டாமுனு நீ தள்ளாதே

பா:—வேண்டாம்போ
நீயா எந்தன் ஜோடி—வாராதே என்பின்னே
வந்தே நல்லா திப்பெ

சிப்:—என்னெத்த

பா:—கும் கும்னு கொழுக்கட்டை சடச்சடசட தோசெங்க
பட படன்னு பூசெங்க

சிப்:—இதெல்லாம் எனக்கு மட்டுந்தானு

பா:—உனக்கேதான் உன் ஓர்த்தனுக்கேதான்

சிப்.—எப்படித்திங்காது

பா:—முதுகிலே கொஞ்சம் இடுப்பிலே கொஞ்சம்
வயத்திலே கொஞ்சம் வாயிலே கொஞ்சம்
கன்னத்திலே தாடையிலே விழுமையா எட்டி நடவையா

சிப்:—படா படா சுபேதார் ஹவுல்தார் டபேதார் மோட்டாதார்
விடாக்கொண்டன் பாத்துக்கோ
கல்யாணம் செய்துக்கோ
லெப்ட் ரைட் லெப்ட் ரைட் லெப்ட் ரைட்

## 9. கோபி

ஏதாகுமோ இனி என்னவாகுமோ
தாயைப்போன்ற மதனியை காத்தினல் அடித்தேனே

கல்லெறிந்ததாலே ரத்தம் வெள்ளமாய் கொட்டியதோ
காயமும் மறந்தே என் சிந்தனையானேனோ

தவறெனதே எனில் அண்ணி தயை புரிந்தருள்வாளோ
பயமிகுந்த பேடி போல பாவி ஓடிவந்தேனே
வீட்டிற்கெப்படிப் போவேனே அண்ணி முகத்தைகாண்பேனே
திக்குதிசை இன்றியே எப்படி வாழ்வேனே

## 10. பின் இசைப்பாட்டு

தீஞ்சுவைக் கதை இதன் முடிவிதா—அய்யோ
தீராத துயரமா விதி இதா (தீஞ்)

குன்றாத பிரேமையும் இன்றோடுமே
கண்ணீரின் தாரையாய் மாறினதோ [தீஞ்]

தாயே—தாயில்லா குறையும் தீர்த்தே
தன்னுயிர் சேயினும் மேலென

வளர்த்தனையே அம்மா—உன்
ஆசையும் வீணாகவே போகுமா

கண்ணே எவர் ஏது சொல்லினும் ஏது நேர்ந்தாலும்
மாதாவின் ஹ்ருதயக்கோவிலிலே தஞ்சம் அடைந்தாயே
இனி நீயும் எவ்வாறு வாழ்வாயடா

## 11. பாட்டு

போடா கண்ணே போ
போய் நீ பாரடா பாரின் ரீதியை [போ]

ஆவேசமதும் மனோதிடமதும்
மதனிக்காகவே நீ துறந்தனையா
பாசபந்தமெனும் ரணம் எதினி
துணிந்து பாரிதன் முடிவும் ஏதென [போ]

உந்தன் ஊரும் வேண்டாம் என்றே
ஊருவிட்டுப் போகின்றாயே
கன காரியம் என்ன சாதிப்பாயோ
ஏதாவாயோ எவரறிவாரோ [போ]

தோன்றிடும் மலைகள் சமமாய் உளதோ
தோஷம் உன்னில் ஏதும் இல்லையோ
நீயும் நம்பிய நீதி ஞாயம்
நிஜமோ பொய்யோ நீ அறிவாய் போ [போ]

தேச சேவைக்கே தீக்ஷைகொள் என்றே
தீரத்தாயின் உயர் அருளிது கண்ணே
காக்கையை குயில் என செய்வாயோ
உலகினிலே ஒன்றாய்ப் போவாயோ [போ]

## 12. கோபி

மாந்தர் என்பார் இவர்தானோ
மாநில மென்பதும் இதுதானோ
வறுமையில் வாடுகிறார் பலகோடி

வாழ்கிறார் சீமான் சுகமதும் தேடி
கள்ளரை கனவான் என்கிறார் நாடி
கலியுக மிதுவென பேசுறார் கூடி [மாந்தர்]

வேஷத்திற்கே தலை வணங்குகிறார்
மோசத்திற்கே மனம் இணங்குகிறார்
சீர்படாது இது செய்வதும் ஏதென
ஆறுதல் கொண்டே போகின்றாரே [மாந்தர்]

மகான்களும் மகாதியாகிகளும்
சொன்ன வார்த்தை செய்பவர் எவரோ
நலம்பெற வழி ஏதும் இல்லையே
வருந்துவதில் பயனும் இல்லையே [மாந்தர்]

முற்றும்

பிரபாத் பிரஸ், வேலூர்.—போன் நெ. 92

வருகிறது !
அஸ்வினியின்
மாயக்காரி
தமிழ்
நேஷனல் பிக்சர்ஸ் ரிலீஸ்